# அரசாங்க அறிவித்தல்

## 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

## 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தியமைக்கப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துக்குப் பின்னர் வந்துள்ள அட்டவணையின் நிரல் I, II ஆம் மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள மீதும் மற்றும் அப்பொருட்களுக்கு நேரெதிரே 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 2044/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் I ஆம் அட்டவணையில் மற்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆந் திகதிய 2097/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் மீதும், அதே அட்டவணையில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில், IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதங்கள் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் உற்பத்தி வரி செலுத்தப்படுதல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆந் திகதிய 2097/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது, 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ
நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
கொழும்பு 01,
2018 திசெம்பர், 03 ஆந் திகதி.

**அட்டவணை**

| இ.மு. தலைப்பு I | இ.மு. குறியீடு II | விபரம் III | உற்பத்தி வரி IV |
|---|---|---|---|
| **22.02** | | **நீர், கனிப்பொருள் நீரும் தாதுப்பொருள் நீரும் உட்பட மற்றும் காற்றூட்டப்பட்ட நீர், சீனி அலலது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மணமூட்டப்பட்டவையும் பிற மதுசாரப் பானங்களும் தலைப்பு 20.09 இல் கீழுள்ள பழ அல்லது மரக்கறி சாறுகள் கொண்டிராதவை.** | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | 2202.10 | நீர், கனிப்பொருள் நீரும் காற்றூட்டப்பட்ட நீரும் உட்பட, சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மணமூட்டப்பட்டவையும். | லீற்றர் ஒன்றுக்கு ரூபா.12./- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி.லீ இற்கு 6 கிராம்களை நீக்கி, கிராம் ஒன்றிற்கு ரூ.30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | 2202.99 | பிற: | |
| | 2202.99.30 | ‘‘சக்தியளிக்கும் பானங்கள்’’ என விற்பனைக்கு விடப்பட்ட குடிபானங்கள் | லீற்றர் ஒன்றுக்கு ரூபா.12./- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி.லீ இற்கு 6 கிராமினை நீக்கி, கிராம் ஒன்றிற்கு ரூ.30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | | பழம் அல்லது மரக்கறி சாரினாலான குடிபானங்கள்: | |
| | 2202.99.51 | சீனி உள்ளடக்கம் - 100 மி.லி இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | லீற்றர் ஒன்றுக்கு ரூபா.12./- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி.லீ இற்கு 9 கிராமினை நீக்கி, கிராம் ஒன்றிற்கு ரூ.30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | | பிற: | |
| | 2202.99.91 | சீனி உள்ளடக்கம் - 100 மி.லி இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | லீற்றர் ஒன்றுக்கு ரூபா.12./- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி.லீ இற்கு 9 கிராமினை நீக்கி, கிராம் ஒன்றிற்கு ரூ.30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |